நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்

முன்னிலை:- திருமதி. பா. சுமிதா, பி.ஏ.,எல்.எல்.பி.,

நீதித்துறை நடுவர் எண்.2

திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்

2019ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15ம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 1/2017**

அரசுக்காக குரிசிலாப்பட்டு காவல் நிலைய
உதவி ஆய்வாளர் அவர்கள் (குற்ற எண் 157/15) ....குற்றமுறையிடுபவர்

-/எதிராக/-

1.கர்ணன் த/பெ பெருமாள்
2.வெங்கடேசன் த/பெ ரங்கசாமி
3.ரமேஷ் த/பெ நாராயணராவ்
4.ராஜேந்திரன் த/பெ பொன்னுசாமி
5.குமரவேல் த/பெ ராமகிருஷ்ணன் .... எதிரிகள்

இந்த வழக்கு 02.01.2017 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு என் முன்னிலைக்கு வரப்பட்டு குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வி.வி.சிவாஜி, பி.ஏ., பி.எல்., அவர்களும் ஆஜராகி இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்,

**தீர்ப்புரை**

1. இவ்வழக்கில் கடந்த 06.10.2015ம் தேதி பகல் 12.30 மணிக்கு குரிசிலாப்பட்டு , ஆண்டியப்பனூர் கிராமம் பஸ் ஸ்டாப் அருகே உள்ள மந்தைவெளி புறம்போக்கில் எதிரிகள் குற்ற எண்ணத்துடன் அத்துமீறி நுழைந்து எதிரிகள் சம்பவ இடத்தில் அரசு அதிகாரிகளான சாட்சிகள் 1,2 மற்றும் சாட்சி -3 ஆகியோர்கள் அரசுக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று சொன்ன உத்தரவுக்கு கீழ்படியாமல் ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டு 3-ம் எதிரி ரமேஷ் சாட்சிகள் 1,2 மற்றும் சாட்சி -3 ஆகியோர் அரசு அதிகாரிகள் என்று பாராமல் " உங்கோத்தா நாயே என்று அசிங்கமாக திட்டியும், பின்னர் மேற்படி அரசு அதிகாரிகளிடம் எதிரிகள்

அனைவரும் ' "எங்களை தடுத்ததால் உங்கள் அனைவரையும் உதைப்போம் ஒழுங்காக போய் விடுங்கள் இந்த இடத்தில் நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம்" என்று குற்ற வன்முறையில் ஈடுபட்டதால் இதச பிரிவுகள் 447, 188, 294(பி), 353ன்படி குற்றம் புரிந்துள்ளதாக குரிசிலாப்பட்டு காவல் நிலைய உதவி ஆய்வாளரால் கு.வி.மு.ச. பிரிவு 173(2)-ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டு போதியகால அவகாசம் கொடுத்த பின்னர் எதிரிகளிடம் குற்றங்கள் குறித்து வினவிய போது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லையென மறுத்தாகள். மேலும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்வையிட்டு, எதிரிகள் மீது குற்றசாட்டுகள் வனைய போதிய முகாந்திரம் இருந்தமையால் இ.த.ச பிரிவுகள் 147, 447, 294(பி), மற்றும் 353, 506(1)ன் படியும், குற்றச்சாட்டுகள் வனைந்து படித்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தாகள்.

**3.** எதிரிகள் தம்மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளதால் அரசு தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் சாட்சிகள் அழைக்கப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. <u>அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியங்களிலிந்து அறியப்படுவது யாதெனில்:</u>**

இவ்வழக்கில் புகார்தாரரான ஆண்டியப்பனூார் கிராம நிர்வாக அலுவலர் அ.சா.1.டி.ஆர்.திலீப், அவர்கள் தகவலின்பேரில் கடந்த 06.10.2015 தேதி, பகல் சுமார் 12.30 மணியளவில் ஆண்டியப்பனூார் மதுரா லாலாப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த எதிரிகள் கர்ணன், வெங்கடேசன், ரமேஷ், ராஜேந்திரன் மற்றும் குமரவேல் ஆகியோர்கள் மேற்கண்ட கிராம சர்வே எண். 358/2ல் மந்தைவெளி புறம்போக்கில் ஆண்டியப்பனூார் பஸ் ஸ்டாப் எதிரில் உள்ள மேற்படி இடத்தில் அத்துமீறி நுழைந்து முள்வேலி கல் கம்பங்கள் நட்டு ஆக்கிரமிப்பு செய்து கொண்டு இருந்ததை கண்ட அ.சா.1. திலீப் கிராம நிர்வாக அலுவலர், மற்றும் அ.சா.2. திரு.நவநீதம் ஆண்டியப்பனூார் வருவாய் ஆய்வாளர் மற்றும் அ.சா.3. திருமதி. சுமதி மண்டல துணை

வட்டாட்சியா ஆகியோர்களுடன் ஆக்கிரமிப்பு செய்த இடத்திற்கு சென்று கேட்டதற்கு மேற்படி நபர்கள் அரசு ஊழியர் என்று பாராமல் அரசு பணியை செய்ய விடாமல் தடுத்தும் தகாத வார்த்தையில் 3-ம் ரமேஷ் என்பவர் "ங்கோத்தா நாயே" என்று திட்டி தடுத்தும் "உங்கள் அனைவரையும் உதைப்போம் ஒழுங்காக போய்விடுங்கள் இந்த இடத்தில் நாங்கள் என்ன வேண்டுமானலும் செய்வோம், ஒழுங்காய் போய் விடுங்கள்" என்று மேற்படி ஐந்து நபர்களும் மிரட்டியதாகவும், நடந்த சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க கோரி குரிசிலாப்பட்டு காவல்நிலையத்தில் ஆஜராகி அ.சா.1 திலீப் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் கொடுத்த அ.த.சா.ஆ.1. புகாரை விசாரணை அதிகாரி அ.சா.8. இளவரசன் உதவி ஆய்வாளர் அவர்கள் பெற்று பரிசீலனை செய்து நிலைய குற்ற எண் 157/15 இதச பிரிவுகள் 447, 188, 294(பி), 353 ன் கீழ் அ.த.சா.ஆ.8. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் அ.சா.6 சக்திவேல், மற்றும் அ.சா.7 சரவணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.9 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்பு வழக்கில் கண்ட சாட்சிகள் சாட்சிகள் அனைவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே எதிரிகளை மிட்டூர் பெட்ரோல் பங்கிடம் 19.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்புவித்ததாகவும், பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி கொண்டதாகவும், வழக்கின் புலன் விசாரனை முடித்து எதிரியின் மீது இதச பிரிவுகள் 447, 188, 294(பி), 353ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கை முன்னிறுத்தும் வகையில் புகார்தாரர் திரு.டி.ஆர். திலீப் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் அ.சா.1 ஆகவும், நேரடி சாட்சிகளான திருமதி. நவநீதம், வருவாய் ஆய்வாளர் அவர்கள் அ.சா.2 ஆகவும், திருமதி.சுமதி மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் அ.சா.3 ஆகவும், கிராம உதவியாளர் முத்துசாமி அ.சா.4 ஆகவும், கண்ணுற்ற சாட்சி விமலா அ.சா.5 ஆகவும், பார்வை மகஜர் சாட்சிகளான சக்திவேல் அ.சா.6 ஆகவும், சரவணன் அ.சா.7 ஆகவும், வழக்கின் புலன் விசாரணை குறித்து விசாரனை அதிகாரி திரு. இளவரசன் உதவி ஆய்வாளர் அவர்கள் அ.சா.8 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். சாட்சிகள் அ.சா.6. சக்திவேல் மற்றும் அ.சா.7 சரவணன் ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் வழங்கியதால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6.** அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து, எதிரிகளுக்கு எதிராக பாதகமாக தோன்றிய அம்சங்களை கு.வி.மு.ச. பிரிவு 313(1)ன் கீழ் எடுத்து கூறி வினவியபோது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சிகள் என்றும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என கூறிய நிலையில், பின்னிட்டு எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல் எதிரிகள் தரப்பும் முடிக்கப்பட்டுள்ளது.

7. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகளின் சாட்சியங்கள் சான்றாவணங்கள் ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பட்டது. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில் எதிரிகள் அரசு பணியில் இருந்த சாட்சிகளை தரக்குறைவாக பேசி மிரட்டியும் அரசுக்கு சொந்தமான மந்தைவெளி புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயன்றதை தடுத்தபோதும் தொடர்ந்து முள்வேலி போட்டு அரசு பணியை செய்ய விடாமல் தடுத்ததாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிருபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

மாறாக கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள புகார்தாரரான அ.சா.1.திலீப் மற்றும் சம்பவ சாட்சிகள் அரசு தரப்பிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், சம்பவம் நேரம் மாறுபட்டுள்ளது என்றும, சம்பவ இடம் மாறுபட்டுள்ளது என்றும் எதிரிகள்மீது பொய்யாக கொடுக்கப்பட்ட வழக்கு என்றும் அரசுதரப்பு வழக்கின் முரண்பாடுகளை சுட்டிகாட்டி எழுத்துபூர்வமான வாதுரையை தாக்கல் செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**8.** இவ்வழக்கில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினரால் எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வு காணப்பட வேண்டிய விஷயமாகும்.

9. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கு சம்பவம் குறித்து பரிசீலிக்கும்போது, "கடந்த 6.10.2015 அன்று 12.30 மணியளவில் ஆண்டியப்பனூர் பஸ் நிலையம் அருகே உள்ள மந்தைவெளி புறம்போக்கு நிலத்தில்" சம்பவம் நடந்ததாக அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சம்பவ நாள், நேரம் மற்றும் இடம் குறித்து சாட்சிகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதா? என

தீர்மானிக்க வழக்கின் முக்கிய நேரடி சாட்சிகளை முதலாவதாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 திலீப் கிராம நிர்வாக அலுவலர் தனது முதல் விசாரணையில் 06.10.2015 அன்று ஆண்டியப்பனூர் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்வதாக தகவல் வந்து சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் பின்னர் அச்சம்பவம் குறித்து அவருடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னதன் பேரில் அ.சா.2 நவநீதம் வருவாய் ஆய்வாளர் மற்றும் அ.சா.3 சுமதி துணை வட்டாட்சியர் ஆகியோர் வந்ததாகவும், அ.சா.3 சுமதி துணை வட்டாட்சியர் வந்த 12.30 மணியளவில் எதிரிகள் திட்டி முள்வேலி அமைத்து கொண்டிருந்ததாக சம்பவ நாள், நேரம், இடம் குறித்த சங்கதிகளை அவர் கொடுத்த அ.த.சா.ஆ.1 புகாருக்கும் அரசு தரப்பிற்கும் ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார்.

10. மேலும் அ.சா.2 நவநீதம் வருவாய் ஆய்வாளர் மற்றும் அ.சா.3 சுமதி துணை வட்டாட்சியர் ஆகியோரும் அவ்வாறே 06.10.2015 அன்று ஆண்டியப்பனூர் பேருந்து நிறுத்தம் எதிரே உள்ள மந்தைவெளி புறம்போக்கு நிலத்தில் சம்பவம் நடந்ததாக சாட்சியமளித்துள்ளனர். எதிரிகள் தரப்பில் எழுத்து பூர்வமான வாதுரையில் அ.சா.1 திலீப் கிராம நிர்வாக அலுவலர் சம்பவம் குறித்து தகவல் சொன்ன பிறகே அ.சா.2 நவநீதம் வருவாய் ஆய்வாளர் மற்றும் அ.சா.3 சுமதி துணை வட்டாட்சியர் ஆகியோர் சம்பவ இடம் வந்துள்ளதால் சம்பவம் 12.30 மணிக்கு நடந்திருக்க வாய்ப்பில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ நேரம் குறித்து பார்க்கும்போது அ.த.சா.ஆ.1 புகாரில் 12.30 மணியளவில் நடந்ததாக கண்டுள்ளது. அ.சா.1 திலீப் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியத்தில் ஆக்கிரமிப்பு தகவல் அறிந்து அ.சா.2 நவநீதம் வருவாய் ஆய்வாளருக்கு தகவல் சொன்னதாகவும் அவர் சம்பவ இடம் வந்த பிறகும் எதிரிகள் கேட்காததால் வருவாய் ஆய்வாளர் வட்டாட்சியருக்கு தகவல் சொன்னதின் பேரில் வட்டாட்சியர் வெளி அலுவலில் இருந்தால் துணை வட்டாட்சியர் அ.சா.3 சுமதி என்பவரை அனுப்பி வைத்ததாகவும் அவர் 12.30 மணிக்கு சம்பவ இடம் வந்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளார். மேலும் அ.சா.2 நவநீதம் வருவாய் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்திலிருந்து 1/2 கி.மீ தொலைவில் அவருடைய அலுவலகம் உள்ளது என குறிப்பிட்டுள்ளதிலிருந்து அவர் சாட்சியமளித்தவாறு தகவல் அறிந்து உடனடியாக வந்திருக்க கூடும். அவ்வாறே அ.சா.3 சுமதி துணை வட்டாட்சியர் அவர்கள் சம்பவம் குறித்த தகவல் தெரிந்தவுடன் 30 கி.மீ தூரத்தில் அலுவலகத்தில் இருந்து 12.30 மணிக்குள் அங்கு வந்து விட்டதாக குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். தவிர அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகளும் அவர்கள் மூவரும் அங்கு இருந்தபோது தான் எதிரிகள் அசிங்கமாக திட்டி முள்வேலி போடுவதை நிறுத்தாமல் தொடர்ந்து செய்து

கொண்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளனர். எனவே சம்பவம் 10, 15 நிமிடங்களுக்கு முன்பாக தொடங்கியிருந்தாலும், அ.சா.3 சுமதி துணை வட்டாட்சியர் வந்த பிறகும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததை அறிய முடிகிறது. எனவே சம்பவம் 12.30 மணியளவில் நடந்துள்ளதாக முன் வைத்த சங்கதிகளில் எந்த முரண்பாடும் அமையவில்லை.

11. மேலும், அச்சம்பவம் தொடர்பாக கொடுக்கப்பட்ட புகார் குறித்து ஆராய்ந்து பார்க்கும்போது் சம்பவம் மதிய நேரம் நடந்த பின்னர் மேலதிகாரிகளின் அனுமதி பெற்று அன்றைய தினம் மாலை புகார் கொடுத்ததாக அ.சா.1 திலீப் கிராம நிர்வாக அலுவலரின் சாட்சியம் அமைந்துள்ளது. அதற்கேற்றார்போல் புகார் 5.00 மணிக்கு பெறப்பட்டு அ.த.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை உடனடியாக பதிவு செய்யப்பட்டதாக அ.சா.8 இளவரசன் உதவி ஆய்வாளரின் சாட்சியம் அமைந்துள்ளது. அதை ஒத்துரைக்கும் வகையில் அ.த.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் மற்றும் அ.த.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை சான்றாவண சங்கதிகள் காணப்படுகிறது. எதிரிகள் தரப்பு எழுத்து பூர்வமான வாதுரையில் புகார் கொடுக்க அ.சா.1 திலீப் உடன் சென்ற அ.சா.4 முத்துசாமி கிராம நிர்வாக உதவியாளர் புகார் கொடுக்கும்போது 7 மணியிருக்கும் என பதிலளித்துள்ளதை சுட்டி காட்டி புகார் உடனடியாக கொடுக்கப்படவில்லை என வாதிடப்பட்டது. ஆனால் அ.சா.4 முத்துசாமி முதல் விசாரணையில் அ.சா.1 திலீப் உடன் புகார் கொடுக்க மாலை 5.00 மணிக்கு சென்றதாகவும், குறுக்கு விசாரணையில், அன்றைய தினம் 6.00 மணியளவில் அ.சா.1 திலீப் கிராம நிர்வாக அலுவலர், அ.சா.2 நவநீதம் வருவாய் ஆய்வாளர் மற்றும் அ.சா.3 சுமதி துணை வட்டாட்சியர் ஆகியோர்களுடன் காவல் நிலையத்தில் இருந்ததாகவும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் மட்டும் உள்ளே சென்றதாகவும், இவர் வெளியே நின்றதாகவும், பதிலளித்துள்ளார். ஆனால் ஆவணங்களை பரிசீலிக்கும்போது அ.சா.1 திலீப் கிராம நிர்வாக அலுவலர் மாலை 5.00 மணிக்கு கொடுத்த புகாரின்பேரில் அ.த.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 6.00 மணிக்கு சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டு இரவு 7 மணிக்கு எதிரிகள் கைது செய்யப்பட்டு 8 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஆவணங்களில் புலனாகிறது. தவிர அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் காவல்நிலையத்தில் இருந்தபோதே எதிரிகள் அழைத்து வரப்பட்டதாகவும் எந்த சங்கதிகளும் காணப்படவில்லை. தவிர சரியாக 5 மணிக்கு அ.சா.1 திலீப் உடன் காவல் நிலையம் சென்றதாக முன்வைத்த சங்கதிகள் குறுக்கு விசாரணையில் மறுக்கப்படவில்லை. எனவே காவல் நிலையத்தில் வெளியே இருந்த உதவியாளர் 7.00

மணி ஆகியிருக்கலாம் என அளித்த சாட்சியம் மட்டுமே புகார் அன்று மாலை 5.00 மணியளவில் கொடுக்கபட்ட சங்கதிகளை மறுக்கும் வகையில் அமையாது.

12. மேலும் வழக்கின் புலன் விசாரணை குறித்து பார்கதும்போது புகாரின் அடிப்படையில் அ.த.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த வழக்கில் சம்பவ இடம் சென்று சான்றாவணங்கள் தயார் செய்யப்பட்டதாக அ.சா.8 இளவரசன் உதவி ஆய்வாளர் அவர்களின் சாட்சியமும் அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ10 சான்றாவணங்கள் தெளிவுபடுத்துகிறது. எதிரிகள் தரப்பில் மகஜர் சாட்சிகள் அ.சா.6 சக்திவேல் மற்றும் அ.சா.7 சரவணன் ஆகியோர் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்ததாக பதில் அளித்துள்ளதை சுட்டிகாட்டி சான்றாவணங்கள் சந்தேகம் கொள்ள வைப்பதாக வாதிடப்பட்டது. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.7. சரவணன் முதல் விசாரணையில் பஸ் ஸ்டாண்டு அருகே பெட்டிகடை வைத்திருப்பதாகவும், கடைக்கு பின்புறம் உள்ள மந்தைவெளிபுறம்போக்கு நிலத்தில் எதிரிகள் சைக்கிளில் ஸ்டாண்டு போட்டது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டதாக தகவல் அறிந்ததாகவும் இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தபோது கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.6 சக்திவேலும் தனது கடை அருகே கோழிகடை வைத்துள்ளதை ஒப்பு கொண்டுள்ளார். இருவரும் புறம்போக்கு நிலத்தில் கடை வைத்திருப்பதாக காணும்போது நடைபாதை கடைகளை அகற்றும் பணி அவர்களுக்கு எதிராகவும் நடைபெற கூடும். எனவே அவர்கள் சாட்சிகளுக்கு எதிராக உண்மை சங்கதிகளை மறைக்க வாய்ப்புகள் உண்டு ஆயினும் போலிசார் சம்பவம் தொடர்பாக அங்கு விசாரணை செய்தது மறுக்கப்படவில்லை. எனவே, சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது தெளிவாக புலனாகிறது.

13. எனவே, சம்பவ நாள், நேரம், இடம் மற்றும் சம்பவம் தொடர்பாக கொடுக்கப்பட்ட புகார் அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தெளிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் எதிரிகளின் செயல்பாடுகள் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளனவா? என தீர்மானிக்க அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகளை தனித்தனியாக தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் முதலாவதாக **இதச 448:- இப்பிரிவின்படி குற்றமுறு அத்துமீறல் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும். குற்றமுறு அத்துமீறல் என்பது** இதச 441:- இப்பிரிவின்படி "**இன்னொருவரின் உடமையியல் உள்ள சொத்தில் அல்லது சொத்தின் மீது, குற்றம் ஒன்றைச் செய்ய அல்லது அத்தகைய சொத்தின் உடைமையைக் கொண்டிருக்கும் எந்தவொரு நபரையும் மிரட்டும் அவமதிக்கும்**

**அல்லது தொந்தரவு செய்யும் உட்கருத்துடன் நுழையும் அல்லது அந்த சொத்தினுள் அல்லது அதன் மீது சட்டப்படி நுழைந்த பின்னர், அத்தகயை நபரை மிரட்டும், அல்லது அவமதிக்கும் அல்லது தொந்தரவு செய்யும் உட்கருத்துடன் அல்லது குற்றம ஒன்றைச் செய்யும் உட்கருத்துடன் அங்கு சட்டவிரோதமாக தங்கியிருக்கும் எவரொருவரும், குற்றமுரு அத்துமீறலைச் செய்வதாக கூறப்படும்."** இவ்வழக்கில் அரசுக்கு சொந்தமான மந்தைவெளி புறம்போக்கு நிலத்தில் எதிரிகள் அத்து மீறி நுழைந்து சைக்கிள் ஸ்டாண்ட் போட நடவடிக்கைகள் மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

14. எனவே, சம்பவம் யாருடைய நிலத்தில் நடந்துள்ளது என பரிசீலிக்கும்போது, இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் தனி நபர் சாட்சிகள் அல்லர். அவர்கள் அரசு பணியை செய்யும் அதிகாரிகள். சம்பவ இடத்தின் தன்மை குறித்து அ.சா.1 திலீப், அ.சா.2, நவநீதம் அ.சா.3 சுமதி ஆகியோர் சாட்சிகள் சம்பவ இடம் மந்தைவெளிபுறம்போக்கு நிலம் என்றும் அ.சா.1 திலீப் மற்றும் அ.சா.3 சுமதி ஆகியோர் அதன் புல எண் 358/2 என்பதை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளனர். அ.சா.2 நவநீதம் வருவாய் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இட புல எண்ணை 58/2 என பதிலளித்துள்ளதை சுட்டிகாட்டி சம்பவ இடம் மாறுபடுவதாக வாதிடப்பட்டது. ஆனால் அவர் தனது சாட்சியத்தில் சம்பவ இடம் ஆண்டியப்பனூார் பேருந்து நிறுத்தத்திற்கு எதிரே உள்ள மந்தைவெளிபுறம்போக்கு நிலம் என்றும், குறுக்கு விசாரணையில், "அதன் செக்குபந்தி திருப்பத்துார் டு ஆலங்காயம் செல்லும் சாலையில் இடதுபுறம் அமைந்துள்ளது. அதன் ஒருபுறத்தில் எரியும், மறுபுறத்தில் கோவிலும் ஒரு புறம் சாலை வளைந்து செல்கிறது" என தெளிவாக பதிலளித்து சம்பவ இடத்தை அடையாளம் காட்டியுள்ளார். எதிரிகள் தரப்பில் அவ்வாறு எல்லைகள் அ.த.சா.ஆ.9 வரைபடத்தில் காணப்படவில்லை என வாதிடப்பட்டது. ஆனால் வரைபடத்தில் சாலை வளைந்து செல்லும் பகுதி உள்ளதை காண முடிகிறது. தவிர தனி நபர் சாட்சி அ.சா.7 ஏரிக்கரை புறம்போக்கு நிலத்தில் தகராறு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். வழக்கு ஆவணங்களில் மாதிரிவரைபடம் சம்பவ இடம் குறித்து அனுமான தோற்றத்தை விளக்குவதற்கே தவிர அவ்வரைபடத்தில் அதை சுற்றியுள்ள பகுதிகளின் முழுவிவரங்களை குறிப்பிடவில்லை என்ற ஒரே காரணத்திற்காக சாட்சிகளின் மூலம் முன்வைக்கப்பட்ட சம்பவ இட விபரங்கள் நிராகரிக்க இயலாது.அவ்வாறே ஏரிக்கரை நிலம் அளவில் பெரிதாக இருக்கும் எனவே பெரிய அளவிலான பகுதியை மாதிரி வரைபடத்தில் குறிப்பிடாதது அரசு தரப்பை பாதிக்காது.

15. மேலும், இவ்வழக்கு சம்பவ இடத்தை மந்தைவெளி புறம்போக்கு நிலம் என்பதை காட்டும் வகையில் அ.த.சா.ஆ.2 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது குறித்து அ.சா.1 திலீப் கிராம நிர்வாக அலுவலர் அசல் ஆவணங்கள் வேலூர் தலைமை அலுவலகத்திற்கு கணினி பதிவேட்டிற்காக அனுப்பப்பட்டமையால் தாக்கல் செய்யப்படவில்லை என விளக்கமளித்துள்ளார். மேற்படி ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரால் சான்றொப்பமிடப்பட்ட உண்மை நகல் ஆகும். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 79ன்படி சம்பந்தப்பட்ட உரிய அதிகாரி சான்றொப்பமிடும் ஆவணங்களின் மெய்தன்மை ஏற்றுகொள்ளப்படும். ஆனால் இவ்வழக்கில் ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரால் சான்றொப்பமிடப்பட்டுள்ளது. வருவாய்துறை நடப்பு விதிகள்படி நிலம் சம்பந்தபட்ட ஆவணங்களை சான்றொப்பம்மிடும் அதிகாரம் அந்த எல்லைக்குட்பட்ட வட்டாட்சியரை சாரும். எனவே வட்டாட்சியர் உரிய அலுவலராக இருக்கும்போது வழக்கு ஆவணங்கள் அவரால் சான்றொப்பமிடவில்லை. தவிர வழக்கு விசாரணை முழுவதும் அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய போதிய அவகாசம் இருந்த பிறகும் அரசு தரப்பில் அவ்வாறு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. அவ்வாறே அ.த.சா.ஆ.5 புகைப்படங்கள் வரிசை 3 அதன் சிடியுடன் தாக்கல் செய்யப்படவில்லை. சம்பவ நேரத்தில் அப்புகைப்படம் யாரால் எடுக்கப்பட்டது போன்ற சங்கதிகளும் முன் வைக்கப்படவில்லை. எனவே அ.த.சா.ஆ.2 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் முழுமையாக ஏற்றுகொள்ள இயலாது. ஆயினும் 448 பிரிவில் சொத்தின் உரிமையாளர் அல்லது அனுபவம் குறித்து உரிமையியல் நீதிமன்ற விசாரணை போன்று சொத்துரிமையை இந்நீதிமன்றததில் நிர்ணயம் செய்ய இயலாது. மறுக்கப்படாத மேலெழுந்தவாரியாக எழும் சங்கதிகளை கொண்டு தீர்மானிக்க இயலும்.

16. இவ்வழக்கில் அ.சா.1 திலீப் முதல் அ.சா.3 வரையிலானவர்களும் சம்பவஇடம் மந்தைவெளி புறமபோக்கு நிலம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர். கூடுதலாக தனிநபர் சாட்சிகள் அ.சா.5 விமலா தனது முதல் விசாரணையில், "**4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 11 மணிக்கு மேல் நான் எனது வீட்டிற்கு பின்னால் இருந்த போது எதிரிகள் அங்கு வந்து சைக்கிள் ஸ்டேண்டு கட்டுவதற்காக எனது வீட்டிற்கு பின்னால் இருந்த ஏரி புறம்போக்கு நிலத்தை ஆக்ரமிப்பு செய்து கொண்டிருந்தார்கள்.**" என்றும்' அ.சா.7 சரவணன் என்பவரும் கடைக்கு பின்னால் வந்த மந்தைவெளி புறம்போக்கில் சைக்கிள் ஸ்டாண்டு போட்டது சம்பந்தமாக பிரச்சனை

ஏற்பட்டதாக தெளிவாக குறிப்பிட்டுள்ளனர். ஆக சம்பவ இடம் மந்தைவெளி புறம்போக்கு நிலம் என்பதை காண முடிகிறது. புறம்போக்கு நிலம் தனி நபருக்கு பாத்தியப்பட்டதல்ல அரசுக்கு சொந்தமானது ஆகும். தவிர சம்பவ இடம் அரசுக்கு சொந்தமான மந்தைவெளி புறம்போக்கு நிலம் இல்லை என்றோ, தனியாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்றோ அல்லது அரசு இடத்தில் அனுமதிபெற்று நுழைந்ததாகவோ எந்த மறுப்பும் எதிரிகள் தரப்பில் முன்வைக்கப்படவில்லை.

17. எதிரிகள் ஈடுபாடு குறித்து அ.சா.1 திலீப் தனது முதல் விசாரணையில், அவர் பார்த்தபோது கர்ணன் ரமேஷ், வெங்கடேசன், ராஜேந்திரன் ஆகியோர்கள் இருந்ததாகவும், அ.சா.2 நவநீதம் தனது சாட்சியத்தில் கர்ணன் தலைமையில் ரமேஷ் , வெங்கடேஷ், ராஜேந்திரன் மற்றும் பெயர் நினைவில்லாத நபர்கள் இருந்ததாகவும், அ.சா.3 சுமதி ஆண்டியப்பனுரைச் சேர்ந்த கர்ணன் , குமரவேல், வெங்கடேசன், கல்கம்பம் நட்டு கொண்டிருந்ததாகவும், ரமேஷ் அசிங்கமாக பேசியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி சாட்சிகள் எதிரிகளின் பெயர்களை கூறி ஒரு சேர அடையாளப்படுத்தியதாக இல்லை. எனினும் அவர்கள் அரசு பணியாளர்கள் என்பதும் சம்பவ நேரத்தில் அங்கிருந்த பொதுமக்களிடம் தகவல் அறிந்து அவர்களின் பெயர் விவரங்கள் தெரிந்துகொண்டதாகவும் காணமுடிகிறது. எனவே, அவர்களின் பெயர்களை சரியாக நினைவில் இருந்து குறிப்பிட்டு சாட்சியமளிக்க வாய்ப்பு குறைவு. என்றாலும் சம்பவ நேரத்தில் எதிரிகள் அனைவரும் அங்கிருந்ததாக தங்களது சாட்சியத்தில் எதிரிகளை அடையாளப்படுத்தியுள்ளனர். அவ்வாரே தனிநபர் சாட்சிகளான அ.சா.5 விமலாவும் தனது முதல் விசாரணையில் எதிரிகள் அனைவரும் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளார். அவர் குறுக்கு விசாரணையில், **"சம்பவத்தைப் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான"** என பதில் அளித்துள்ளதை சுட்டிகாட்டி அவர் சம்பவத்தை கண்ணுறவில்லை என வாதிடப்பட்டது. ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணையில், தொடர்ச்சியாக **"சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல என்றும் கலாட்டா செய்தது உண்மை தான"** என மேற்சொன்ன சங்கதிகளை மறுக்கும் வகையில் தெளிவாக பதில் அளித்துள்ளார். மேலும் அ.சா.5 விமலா சம்பவத்தை கண்ணுற்ற தனிநபர் சாட்சி அவருக்கும், எதிரிகளுக்கும் முன் விரோதம் இருப்பதாகவோ அவர் அரசு தரப்பிற்கு விருப்ப சாட்சி என ஏற்கும் வகையில் எந்த சங்கதிகளும் காணப்படவில்லை. எனவே, எதிரிகள் கலாட்டா செய்தது உண்மை என கண்டுள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளகூடியது. எனவே சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணத்துடன் எதிரிகள் அனைவரும்

சம்பவ இடத்தில் குற்றமுறு அத்துமீறலை செய்ததாக அரசு தரப்பில் நிருபணம் செய்யபப்பட்டுள்ளது.

18. இதர குற்றச்சாட்டு இதச 147 பிரிவின்படி சட்டத்திற்கு புறம்பாக எதிரிகள் கலகம் விளைவித்தனரா? என பார்க்கும்போது பொது நோக்கத்தில் அரசுக்கு சொந்தமான நிலம் அமைந்துள்ள இடத்தில் சட்டத்திற்கு புறம்பாக சைக்கிள் ஸ்டேண்ட் போட முயற்சி செய்ததாக அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளனர். ஆயினும் கலகம் விளைவிக்கப்பட்டதா? என தீர்மானிக்கும்போது, கலகம் என்பதை இந்திய தண்டனைசட்டம் பிரிவு 146 விளக்குகின்றது. பிரிவு 146 இதசபடி சட்டத்திற்கு புறம்பான கூட்டத்தில் பொது கருத்தை செயல்படுத்த வன்முறையை அல்லது வழி தாக்குதலை பயன்படுத்தும் அந்நபர்கள் கலகம் செய்தவர்களாவர். எனவே இதச பிரிவு 147ன்படி தண்டிக்கத்தக்க நபர்களாக தீர்மானிக்க சட்டத்திற்கு புறம்பான கூட்டத்திலிருந்து வன்முறையை அல்லது வன் தாக்குதலை செய்திருக்கவேண்டும். வன்முறை என்பதை இதச பிரிவு 349 விளக்குகிறது. இதச 349 பிரிவின்படி வன்முறை என்பது-

இயக்கத்தை, இயக்கத்தின் மாற்றத்தை அல்லது திருத்தத்தை மற்றவருக்கு ஏற்படுத்தினால் அல்லது ஏதாவது ஒரு பொருளுக்கு அத்தகைய இயக்கத்தை இயக்கத்தின் மாற்றத்தை அல்லது திருத்தத்தை மற்றவருக்கு ஏற்படுத்தி அப்பொருளை மற்றவரின் உடலின்மீது ஒரு பகுதியுடன் தொடுதலானது மற்றவரின் தொடு உணர்வு ஆற்றலை பாதிக்கப்படுமாறு செய்யுமாறு கொண்டுவந்தால் அவர் வன்முறையை பயன்படுத்துகிறார் என்று கூறப்படும்.

அவ்வாறே, எதிரிகள் மேற்படி சம்பவத்தின்போது வனமுறை மற்றும் தாக்குதலை அல்லது அச்சத்தை, தொந்தரவை விளைவிக்கும் எண்ணத்துடன் தெரிந்தே அதை செய்திருந்தால் குற்றமுறு வன்முறையை பயன்படுத்தியவர் ஆவர். ஆனால், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சம்பவத்தில் குற்றமுறு வன்முறை அல்லது தாக்குதல் எதிரிகளால் நடத்தப்பட்டதாக காணப்படவில்லை. அவ்வாறு சாட்சியங்களும் முன் வைக்கப்படவில்லை. எனவே எதிரிகள் மீதான இதச 147 பிரிவின் உட்கூறுகளை எதிரிகளுக்கு எதிராக நிருபணம் செய்யும் வகையில் அமையவில்லை.

19. இதர குற்றச்சாட்டு இதச பிரிவு 294(பி) எடுத்துரைப்பதாவது:-" ஒரு **பொது இடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாசப் பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற ஒப்பிக்கிற அல்லது மொழிகிற எவரும் குற்றம் புரிந்தவராக கருதப்படும்".** இப்பிரிவின்படி பொது இடத்திலோ அல்லது அதற்கு

அருகாமையிலோ எதிரிகளின் செயல்பாடுகள் நபர்களுக்கு அவமானத்தை ஏற்படுத்தியதாக நிருபனம் செய்யப்படவேண்டும் அந்த 'வகையில் வழக்கு சம்பவத்தில் எதிரிகள் அனைவரும் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகளை அசிங்கமாக திட்டி அவமானப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே நேரடி சாட்சிகளை பார்க்கும்போது அ.சா.1 திலிப் தனது முதல் விசாரணையில் ரமேஷ் மற்றும் வெங்கடேசன், கர்ணன் ஆகிய மூவரும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாரே அ.சா.2 நவநீதம் தனது சாட்சியத்தில் ரமேஷ், கர்ணன், வெங்கடேசன் ஆகியோர்கள் திட்டியதாக அவர்களுடன் ராஜேந்திரன் என்பவரும் அசிங்கமாக திட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.3 சுமதி துணை வட்டாட்சியர் அவர்கள் எதிரி ரமேஷ் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாகவும் மற்ற இருவர் கல் கம்பம் நட்டதாக மட்டுமே சாட்சியமளித்துள்ளார். எனவே நேரடி சாட்சிகள் மூலம் அ.சா.1 முதல் 3 வரையிலானவர்களை 3ம் எதிரி ரமேஷ் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியுள்ளார் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதர எதிரிகள் திட்டியதை சாட்சிகள் ஒருவருக்கொருவர் ஒத்துரைக்கவில்லை. தவிர சம்பவ இடம் பொது இடம் என்பதும் பொதுமக்கள் அருகே கூடியிருந்தனர் என்பதும் சாட்சிகள் மூலம் அறிய முடிகிறது. அவ்வாறான சூழ்நிலையில் அரசு பணியில் இருக்கும் அலுவலர்களை பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டும்போது அது அவமானத்தை ஏற்படுத்தும் என்பதில் எந்த மாற்று கருத்தும் கிடையாது. எனவே 3ம் எதிரி ரமேஷ் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி சாட்சிகளுக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. இதர எதிரிகள் 294(பி)ன்படி சாட்சிகளை அசிங்கமாக திட்டியதாக நிருபணம் செய்யப்படவில்லை. எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் 3-ம் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 294(பி) குற்றச்சாட்டு நிருபணம் செய்துள்ளது.

20. எதிரிகள் மீதான இதர குற்றச்சாட்டு 353 எடுத்துரைப்பதாவது " **ஒரு பொது ஊழியராக இருக்கும் ஒருவர், அத்தகைய பொது ஊழியர் என்ற முறையில் தமது கடமையை நிறைவேற்றும் போது, அல்லது பொது ஊழியர் என்ற முறையில் தமது கடமையைச் சட்டப்பூர்வமாக நிறைவேற்றுகையில் அதன் விளைவாக அத்தகைய பொது ஊழியரால் ஏதாவது ஒன்று செய்யப்பட்டதை அல்லது செய்ய முயலப்பட்டதை தடுக்கும் அல்லது தடை செய்யும் உட்கருத்து கொண்டு எந்தவொரு பொது ஊழியருக்கு தாக்க முனைதலை செய்யும்போது குற்றமாகும்.** இப்பிரிவின்படி சம்பவத்தின்போது எதிரிகள் அரசு பணியிலிருந்த அதிகாரிகளை தனது வேலையை தொடர்ந்து செய்ய விடாமல்

தடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் என்னென்ன பணியை செய்ய விடாமல் தடுத்தார்கள் என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்று வாதுரைக்கப்பட்டது. இவ்வழக்கில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் அரசுக்கு சொந்தமான நிலங்களை பாதுகாக்கவும் அதுசம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள், அவர்களின் தலையாய பணி அரசுக்கு சொந்தமான நிலங்களை தனிநபர் பாத்தியத்திற்கு விடாமல் பாதுகாப்பது ஆகும். ஆயினும் மேற்கண்ட அரசு பணியை செய்யும்போது எதிரிகளால் குற்ற வன்முறையும் வன்தாக்குதல் அல்லது தாக்க முனைதல் ஏற்படுத்தப்பட்டதா? என்பதே எதிரிகள் மீதான குற்றசாட்டை தீர்மானிக்கும் இயலும்.

இதச 351 இதசபடி தாக்க முனைதல் என்பது ஏதாவது ஒரு சைகையை அல்லது முன்னேற்பாட்டை செய்பவர், அங்குள்ள எவர் ஒருவர் மீதாவது குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்தக்கூடும் என்ற அச்சத்தை அவருக்கு விளைவிக்கும்

எண்ணத்துடன் செய்கிற எவரும் தாக்குதலை செய்ததாக சொல்லப்படும்; அவ்வாறே,

இதச 350 பிரிவின்படி குற்றமுறு வன்முறை என்பது ஏதாவது ஒரு வன்முறையை பயன்படுத்தும் வழி யாருக்கும், தொல்லை விளைவிக்கும் எண்ணத்துடன் தெரிந்தே செயல்படும் எவரும் குற்றமுறு வன்முறை பயன்படுத்தியவர் என்றும் விளக்குகின்றது.

21. எனவே, மேற்கண்ட சம்பவ நேரத்தில் எதிரிகள் சாட்சிகளுக்கு எதிராக குற்றமுறு வன்முறையோ அல்லது தாக்குதலையோ செய்ததாக இப்பிரிவுகளின் உட்கூறுகளை எதிரிகள் செய்ததாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே இதச 353 படியான உட்கூறுகளுக்கு ஆதரவாக விசாரிக்கப்பட்ட சாட்சிகள் காணப்படாத நிலையில் அக்குற்றசாட்டு எதிரிகளுக்கு எதிராக நிரூபணம் செய்யப்பட்டதாக ஏற்க இயலாது.

22. எதிரிகளின் மீதான இதர குற்றச்சாட்டு 506(i) எடுத்துரைப்பதாவது:- "**குற்றமுறு அச்சுறுத்தும் செயலை செய்யும் எவரும் மிரட்டல், இறப்பு மற்றும் கொடுங்காயம் முதலியவற்றை விளைவிப்பதாக இருந்தால் அவர் குற்றமிழைத்ததாக**" கருதப்படும். அந்த வகையில் எதிரிகள் 5 பேரும் அந்த இடத்தை விட்டு ஒழுங்காக போய் விடுங்கள் என்று அவர்களை பயத்தை விளைவிக்கும் வகையில் மிரட்டியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 திலீப் எதிரிகள் சாட்சிகள் சொல்லியுள்ளதை கேட்காமல் முயன்று வேலியை அமைத்து கொண்டு இருந்தார்கள் என்றும் அப்பொழுது எதிரிகள் சிலர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக சாட்சியம்

அளித்துள்ளார். சம்பவ இடத்தில் அவர்கள் அங்கிருந்து சொல்லாவிட்டால் விளைவுகளை சந்திக்க வேண்டி வரும் என மிரட்டியதாக அவர் சாட்சியம் அளிக்கவில்லை. இதர சாட்சிகளில் அ.சா.3 எதிரிகள் பிரச்சனை ஏற்பட்டு விடும் என மிரட்டினார்கள் என குறிப்பிட்டு இருப்பினும் அவர் அதனால் உயிர் பயம் ஏற்பட்டு அங்கிருந்து வந்து விட்டதாக காணப்படவில்லை. வெறும் வாய் வார்த்தைகளால் சொல்லப்படும் சங்கதிகள் குற்றமுறு மிரட்டலை ஏற்படுத்தியதாக ஏற்க இயலாது. அதன் பொருட்டு மேற்கொண்டு செயல்பாடுகள் செய்யும்போது குற்றத்தை செய்ததாக கருதமுடியும். தவிர அவ்வாரே அ.சா.2. நவநீதம் எதிரிகள் கல் நட்டு கொண்டிருந்தார்கள் என்றும் 'அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக மட்டுமே குறிப்பிட்டுள்ளனர். எனவே, சம்பவ நேரத்தில் எதிரிகள் குற்றமுறு மிரட்டல் விடுத்து சாட்சிகளுக்கு உயிர் பயத்தை ஏற்படுத்தியதாக தீர்மானிக்கும் வகையில் நேரடி சாட்சிகள் சாட்சியமளிக்கவில்லை. தனிநபர் சாட்சிகளும் எதிரிகள் கலாட்டா செய்ததாக மட்டுமே குறிப்பிட்டுள்ளனர். எதிரிகள் மிரட்டியதாக சாட்சியமளிக்கவில்லை. எனவே எதிரிகள் மீதான இதச 506(1)ன் படியான குற்றசாட்டு நிருபணம் செய்யப்படவில்லை.

23. எனவே, முடிவாக, மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில், 1 முதல் 5 வரையிலான எதிரிகள் மீதான இதச 447ன் கீழான குற்றச்சாட்டிற்கும், 3-ம் எதிரியின்மீதான இதச பிரிவு 294(பி)) ன் கீழான குற்றத்திற்கு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு தகுந்த சாட்சியங்களை கொண்டு நிருபித்துள்ளதாக தீர்மானித்து, எதிரிகளிடம் மேற்படி குற்றத்திற்காக வழங்கப்போகும் தண்டனை குறித்து குவிமுச 248(2) ன் கீழ் வினவியபோது, எதிரிகள் அனைவரும் திருமணமாகி குடும்பம் உள்ளது என்றும் சிறைக்கு அனுப்பினால் குடும்பம் நிர்கதி ஆகிவிடும் என்றும் குறைந்தபட்ச அபராதம் விதித்து மன்னிக்குமாறும் முதல் குற்றவாளிகள் என்றும் கூறினார்கள்.

எனினும், 3-ம் எதிரியின் செயல்பாடுகள் மற்றும் 1 முதல் 5 எதிரிகள் வரையிலானவர்கள் பாதிக்கப்பட்ட அரசு நிலத்திற்கும் ஊழியர்களுக்கும் பங்கத்தை, ஏற்படுத்தியுள்ளதால் அவரிகளின் குற்றத்தை மன்னித்துவிட முடியாது என்பதாலும், எதிரிகளின் கோரிக்கை, இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை ஆகியவைகளை கருத்தில் கொண்டு 1 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கு இதச பிரிவு 447ன் கீழான குற்றத்திற்கு தலா ரூ.500/- அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் 2 வார சிறை தண்டனை விதித்தும் 3ம் எதிரிக்கு இதச பிரிவு 294(பி) ன் கீழான குற்றத்திற்கு 1 வார கால சிறை தண்டணையும், ரூ.1000/- அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் கூடுதலாக 1 வார கால சிறை தண்டணை விதித்தும் குவிமுச பிரிவு 248(2) பிரிவின்படி தண்டனை வழங்கியும், 1,2,4 ம் எதிரிகளின் மீதான இதச பிரிவு 294(பி) ன் கீழான குற்றத்தையும், 1

முதல் 5 எதிரிகள் மீதான இதச பிரிவு 506 (1), 147, 353ன் கீழான குற்றச்சாட்டையும் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லையென தீர்மானித்து 1 முதல் 5 எதிரிகள் பிரிவு 506(1), 147, 353ன் கீழான குற்றத்திற்கும், 1,2,4 எதிரிகள் இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றத்திற்கும் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் 3ம் எதிரி ஏற்கனவே சிறையிலிருந்த 06.10.2015 முதல் 13.10.2015 வரையிலான காலத்தை மேற்படி தண்டனைக்காலத்திலிருந்து கு.வி.மு.ச பிரிவு 428ன் கீழ் கழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

**24.** இவ்வழக்கு எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலம் முடிந்த பின்னரும் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில், எதிரிகளின் பிணை பத்திரத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்திடவும் உத்திரவிடப்படுகிறது.

25. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இந்தத் தீர்ப்புரை முழுவதும் என்னால் சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் காணப்பட்டு 2019 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 15ஆம் நாள் திறந்த நிதீமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) பா. சுமிதா,
நீதித்துறை நடுவர் எண். 2,
திருப்பத்தூர், வே.மா.

**<u>இணைப்பு:- அரசு தரப்பு சாட்சிகள்:-</u>**

1.- திரு.திலீப் (கிராம நிர்வாக அலுவலர்)
2.- திரு. நவநீதம் (வருவாய் ஆய்வாளர்)
3.- திருமதி. சுமதி ( துணை வட்டாட்சியர்)
4.- திரு. முத்துசாமி
5.- திருமதி.விமலா

6.- திரு. சக்திவேல்

7.- திரு. சரவணன்

8.- திரு. இளவசரன் (உதவி ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

1.06.10.2015 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலம்.

2.06.04.2016 ம் தேதியிட்ட ஆ பதிவேடு உண்மை நகல்.

3.06.04.2016 ம் தேதியிட்ட புலவரைபடம் உண்மை நகல்.

4.06.04.2016 ம் தேதியிட்ட அடங்கல் கணக்கின் உண்மை நகல்.

5.06.10.2015 ம் தேதியிட்ட புகைப்படங்கள் ( 3 வரிசை)

6.06.10.2015 ம் தேதியிட்ட பார்வை மகஜரில் உள்ள முதலாவதாக உள்ள அ.சா.6 சக்திவேலின் கையெழுத்து.

7.06.10.2015 ம் தேதியிட்ட பார்வை மகஜரில் உள்ள இரண்டாவதாக உள்ள அ.சா.7 சரவணனின் கையெழுத்து.

8.06.10.2015 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை.

9.06.10.2015 ம் தேதியிட்ட பார்வை மகஜர்

10.06.10.2015 ம் தேதியிட்ட மாதிரி வரைபடம்

**சான்றுபொருள்:- இல்லை.**

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:-</u>** இல்லை

**<u>பின்குறிப்பு</u>**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. விசாரணை சமயம் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்) பா. சுமிதா,
நீதித்துறை நடுவர் எண். 2,
திருப்பத்தூர், வே.மா.

// உண்மை நகல்//

நீதித்துறை நடுவர் எண். 2,
திருப்பத்தூர், வே.மா.

(ஒம்) பா. சுமிதா,
நீதித்துறை நடுவர் எண். 2,
திருப்பத்தூர், வே.மா.

// உண்மை நகல்//

நீதித்துறை நடுவர் எண். 2,
திருப்பத்தூர், வே.மா.